Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★

# ஈழநாடு

THE EELANADU
Nationa Tamil Daily

தபால் பெட்டி எண்; 49
போன் 389

தேசிய தினசரி

மலர் 13
இதழ் 135

யாழ்ப்பாணம் ஆனி 13 ஜுலை 3 ஞாயிற்றுக்கிழமை (27-6-71)

யானை மார்க்
அஸ்பெஸ்டஸ்
கூரைத் தகட்டின்
விலை: 96 சதம்
சதுர அடி
(அரசாங்கக் கட்டுப்பாட்டு விலை)
விநியோகஸ்தர்கள்:-
ஸ்டீல்சன்ஸ்
287-289, ஸ்ரான்லி ரோட்,
யாழ்ப்பாணம்
போன்: 7035

## பாடசாலை நாட்களில் மாற்றம்

# ஜூலைமுதல் ஐந்தரை நாட்கள் அடுத்த ஆண்டு 5 நாள் மட்டும்

## கல்வி அமைச்சர் அறிவிப்பு

கோட்டை; ஞாயிறு

**ஜூலைமாதம் முதல் திகதியிலிருந்து டிசம்பர் மாதம்வரை, சகல பாடசாலைகளும் வாரத்தில் ஐந்தரை நாட்கள் மட்டும் நடைபெறும். 1972-ம் ஆண்டு தொடக்கம் பாடசாலைகள் வழமைபோல் 5 நாட்கள் மட்டுமே நடைபெறும்.**

கல்வி அமைச்சர் டாக்டர் பதியுதீன் மாமூத் இத்தகவலை நேற்று அறிவித்தார்.

வாரத்தில் 6 நாட்கள் பாடசாலைகளை நடத்துவதினால், பெற்றோரும், மாணவரும் அனுபவிக்கும் கஷ்டங்கள் பற்றி பொதுஜனத்தினரால் தெரிவித்த அபிப்பிராயங்களை கருத்திற்கொண்டு இவ்வித முடிவுக்குத் தாம் வந்ததாக கல்வி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

'பொதுஜன அபிப்பிராயத்துக்கு மதிப்பளிக்கும் வகையில் இவ்வித மாற்றத்தை ஜூலை முதல் திகதியிலிருந்து அமுலுக்கு கொண்டுவருகிறேன்' என்று அந்த அறிக்கையில் கல்வி அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

### கல்வி அமைச்சரின் அறிக்கை விபரம்

கல்வி அமைச்சர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

நாட்டில் ஏற்பட்ட பயங்கரவாத நடவடிக்கைகளினால் 28 நாட்கள் பாடசாலைகள் நடத்தமுடியாமல் போய் விட்டது. இதனால் மாணவருக்கு கல்வித்தரம் குறைந்து விடும் என அஞ்சப்பட்டது. பாடசாலை நேரங்களை அதிகரிப்பதின் மூலம், கிளர்ச்சி காரணமாகக் குறைந்த பாடசாலை நாட்களை ஓரளவேனும் நிறைவு படுத்தலாம் என்ற எண்ணத்துடன் வாரத்தில் 6 நாள் பாடசாலை என்ற திட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்தேன்.

6 நாள் திட்டத்தினை சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் கஷ்டங்கள் பற்றி பல கல்விமான்களும், பொது ஸ்தாபனங்களும், பெற்றோரும எனக்கு குறைதெரிவித்த வண்ணமிருந்தனர்.

அரசாங்க ஊழியர்களும் வாரத்தில் ஐந்தரை நாட்கள் மட்டுமே வேலைசெய்யும்போது மாணவர்கள் 6 நாள் வேலை செய்ய வேண்டி ஏற்பட்டுள்ளது என்று பலர் சுட்டிக்காட்டினர்: பொது ஜனங்களிடமிருந்து கிடைக்கப்பெற்ற பல்வேறு கஷ்டங்களும் கவனத்திற்கு எடுக்கப்பட்ட பின்னர் இந்த முடிவுக்கு வந்துள்ளேன்.

ஜூலைமாதம் முதல் திகதியிலிருந்து இவ்வாண்டு டிசம்பர் மாதம்வரை வாரத்தில் ஐந்தரை நாட்கள் பாடசாலை நடைபெறும் 1972ல் இருந்து வழமைபோல் 5 நாட்கள் மட்டுமே பாடசாலைகள் நடைபெறும்.

ஜூலை முதல் திகதியிலிருந்து ஆறுவது நாளில் காலை 7-30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பாடசாலை நடக்கும் காலை 8 மணிக்கு ஆரம்பமாகும்

(6-ம் பக்கம் பார்க்க)

## யாழ். பிஷப்பாக அபிஷேகம் பெறுகிறார்

இம்மாதம் 29-ம் திகதி காலை வண டேவிட் ஜெயரத்தினம் அம்பலவாணர் யாழ்ப்பாண பிஷப்பாக வட்டுக்கோட்டை கதீட்ரல் தேவாலயத்தில் அபிஷேகம் செய்யப்படவுள்ளார்.

இவர் புங்குடுதீவைச் சேர்ந்த அம்பலவாணர் தம்பதிகளின் புத்திரராவர் இவரது தந்தை வண ஜே. பி. அம்பலவாணர் சிறந்த ஒழுக்கசீலரும் தெய்வாம்சம் பொருந்தியவருமாவர்.

வண டேவிட் ஜெயரத்தினம் லண்டன் பல்கலைக் கழக பி ஏ பட்டதாரி இவர் 1957-1958-ம் ஆண்டு யாழ். கிறிஸ்தவசங்கத்தின் செயலாளராகக் கடமையாற்றினர் யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர்கள் சபையின் அங்கத்தவராகவும் 1963-ம் ஆண்டிலிருந்து 1965 ம் ஆண்டுவரை கடமையாற்றினர் மறுபடியும் கடந்த இரு ஆண்டுகளாக இவர் மேற்படி சபையில் அங்கத்துவம் வகித்தார்.

1956-ம் ஆண்டு டாக்டர் சந்திராணி கணபதிப்பிள்ளையை திருமணம் செய்து கொண்டார்.

அரசியல் நிர்ணய சபையில்:

## தமிழரசுக்கட்சியினர் மீது ஆனந்தசங்கரி கண்டனம்

### 'தமிழருக்கு சிறந்த தலைவர்கள் கிடைக்கவில்லை' —சொய்சா

கொழும்பு, சனி

தமிழர்கள் நல்ல தலைவர்கள் கிடைக்காத துர்ப்பாக்கிய நிலையில் இருக்கிறார்கள். தமிழருக்கு ஆபத்து ஏற்படும்போது, சொந்தநலனைப் பேணும் நோக்கத்துடன் முதலாளித்துவ வர்க்கத்துடன் அவர்கள் சேர்ந்துவிடுகிறார்கள். கடந்தகால வரலாற்றுஉண்மைகளை தமிழ்த் தலைவர்கள் மறந்துவிட்டார்கள்' என்று அரசியல் நிர்ணயசபையில் திரு பேர்னுட் சொய்சா இன்று பேசுகையில் கூறினார்.

11வது அடிப்படைத் தீர்மானம் மீதான விவாதம் தொடர்ந்து நடைபெற்றபோது, தமிழரசுக் கட்சியினர் கொண்டுவந்த திருத்தத்தை குறிப்பிட்டுப் பேசுகையிலேயே திரு சொய்சா இப்படிக் குற்றஞ்சாட்டினார்.

கிளிநொச்சி எம். பி திரு வி ஆனந்தசங்கரி பேசுகையில் கூறியதாவது

தமிழ்மொழிக்கு சம அந்தஸ்து வேண்டும் என்ற கொள்கையிலிருந்து நாம் மாறவில்லை. ஆனால் இப்போதிருக்கும் பிரச்னையை மேலும் பிரச்னையாக்கவிரும்பாமல் — இப்போதிருக்கும் சூழ்நிலையில் பெறக் கூடியதைப் பெறுவதிலேயே நாம் அக்கறைகாட்டுகிறோம்

மொழிப்பிரச்னை ஒரு பெரும் பிரச்னையாக இல்லாத காலத்தில் இதைப் பிரச்னையாக உருவாக்கியவர்கள் தமிழரசுக் கட்சியினர்தான். காலஞ் சென்ற பிரதமர் எஸ் டபிள்யூ ஆர் டி பண்டாரநாயக்கா உயிரோடிருந்த காலத்தில் இவர்களுடன் பேச்சுவார்த்தைநடாத்தி கொடுப்பதாகச் சொல்லியதை 1956-ம் ஆண்டில் பெற்றுக்கொள்ளாமல் விட்டுவிட்டு அப்போது திரு பண்டாரநாயக்கா தருவதென்ற உரிமையையாவது இப்போது தாருங்கள் என்று தமிழரசுக் கட்சியினர் 15 வருடங்களின்பின் கேட்கிறார்கள்.

1956-ம் ஆண்டிலிருந்து 1970 ம் ஆண்டுவரை இந்தப் பிரச்னையை தமிழர் மத்தியில் வைத்து அரசியல் நடத்திவிட்டு 1971ம் ஆண்டில் மீண்டும் இந்தப் பிரச்னையை இங்கு கிளப்பியுள்ளனர். இப்பொழுதும் அரசாங்கம் கொடுப்பதற்கு முன்வந்துள்ளவற்றை வேண்டாம் என்று மறுத்துவிட்டு அரசியல் நிர்ணய சபையிலிருந்து வெளியேறினால் 10 ஆண்டுகளின் பின்னர் வந்தும் 1971ல் தருவதென்று கூறியதை பெறாமல் விட்டது குறித்து வருத்தப்படுவார்கள்.

### சர்வகட்சி மாநாடு

பயமுறுத்தியோ சவால் விட்டோ அரசியல்நடத்திய காலம் போய்விட்டது. அண்மையில் கல்வி அமைச்சரின் கொடும்பாவியை யாழ்ப்பாணத்தில் எரித்தபோது கிழக்கு மாகாணத்தில் மாறுதாரமான விளைவுகள் ஏற்பட

(6-ம் பக்கம் பார்க்க)

சிறந்த அலுமினியப் பாத்திரங்களுக்கு
ONE-DOLLAR
டாலர் அலுமினியம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 120 பேர் தெரிவு

குருநகர், சனி

வவனியா மாவட்டத்தில் உள்ள விவசாயக் காணிகளில் காணி கொடுப்பதற்கென நடத்தப்பட்ட காணிக்கச்சேரிகளில் வடபகுதியிலிருந்து மொத்தம் 120பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களில் ஒவ்வொருகாரியாதிகாரி பிரிவிலிருந்தும் தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களின் தொகைவிபரம் பின்வருமாறு:

யாழ்ப்பாணம் காரியாதிகாரி பிரிவு-19, பளைக்காரியாதிகாரி பிரிவு-2, நெடுந்தீவுக்காரியாதிகாரி பிரிவு-10, துணுக்காய்க் காரியாதிகாரிபிரிவு 1, பூநகரிக்காரியாதிகாரி பிரிவு-2, கிளிநொச்சிக் காரியாதிகாரி பிரிவு-6, வலிமேற்குக்காரியாதிகாரி பிரிவு-7, வலி கிழக்கு-10, தீவுப்பகுதிக் காரியாதிகாரி பிரிவு-3, வலிவடக்கு-7, தென்மராட்சிக் காரியாதிகாரி பிரிவு-21, வடமராட்சிக்காரியாதிகாரி பிரிவு-32.

## பாகிஸ்தானுக்கான நெதர்லாந்து உதவிநிறுத்தம்

ஹேக், ஜூன். 26

பாகிஸ்தானில், அரசியல் நெருக்கடி தீரும்வரையில் அதற்கான சகல உதவிகளையும் நிறுத்துவதென நெதர்லாந்து அரசாங்கம் முடிவுசெய்துள்ளது. பாகிஸ்தானில் அமைதியான சமூக பொருளாதார வளர்ச்சிக்கே நெதர்லாந்து உதவி செய்யவிருப்புறேதே தவிர போர் வழிமுறைகளுக்கு உதவிசெய்ய விரும்பவில்லை என நெதர்லாந்து அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது.

## இடமாற்றம் பின்போடப்பட்டது

யாழ்ப்பாணம், ஞாயிறு

வடமாநிலக் கல்வித் திணைக்கள கணக்காளராக இருந்து நீர்ப்பாசனத் திணைக்களத் தலைமைக்கணக்காளராக பதவியுயர்வுடன் இடமாற்றம் பெற்றிருந்த திரு. மு நல்லையாவின் இடமாற்றம் இரண்டு மாதத்திற்குப் பின்போடப்பட்டுள்ளது. இப்போது திரு நல்லையாவும், அவரிடத்திற்கு மாற்றலாகி வந்த திரு இராஜசயாவும் வடமாநிலக் கல்வித் திணைக்களக் கணக்காளராகக் கடமையாற்றி வருகின்றனர்

## ரெண்டர் விளம்பரம்

மானிப்பாய் பட்டினசபையின் எல்லையுள் உள்ள இராசகாரியர் வீதி திருத்த வதற்கு "சீல்" வைத்த ரெண்டர்கள் (ரூபா 7,500|-க்கு மேற்பட்ட வேலைகளுக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரரிடமிருந்து மானிப்பாய் பட்டினசபை காரியாலயத்தில் ரூபா 50|- பிணைப்பணமும் ரூபா 10|- கேள்விப்பத்திரப் பணமுமாகச் செலுத்திப் பெறும் பத்திரத்தில் 20-7-71 காலை 9 மணி வரை மானிப்பாய் பட்டின சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 19-7-71 பகல் 12 மணி வரை வழங்கப்படும்.

மற்றும் விபரங்களை இக் காரியாலயத்தில் நேரில் பெற்றுக்கொள்ளலாம்.

ஒப்பம்:

சி. பொ. வ. மா. க. முதலியார்,<br>தலைவர்,<br>பட்டினசபை,<br>மானிப்பாய்.

பட்டினசபைக் காரியாலயம்,<br>மானிப்பாய்,<br>25-6-71. 2869

## அமைச்சரை அழைக்க முடிவு

அரியாலை, சனி

நல்லூர் அரசடியிலுள்ள ஜனசக்தி வாசிகசாலைப் புதிய கட்டிடம் அடுத்த மாத நடுப்பகுதியில் திறக்கப்படவிருக்கிறது. வீடமைப்பு அமைச்சர் திரு.பீட்டர் கெனமனை அழைத்துப் புதிய கட்டிடத்தை திறப்பதென வாசிகசாலை நிர்வாகிகள் தீர்மானித்துள்ளனர்.

இப்பகுதி வாலிபர்கள் சிரமதான முறையில் இக் கட்டிடத்தை அமைத்து வருவது குறிப்பிடத்தக்கது.

## இலங்கை தெலுங்கு கலாச்சாரச் சங்கம்

கொழும்பு, சனி

இலங்கைதெலுங்கு கலாச்சார சங்கம் கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது இலங்கையிலுள்ள தெலுங்கர்களை ஒன்றிணைப்பதும் அவர்களது கலாச்சார பாரம்பரியத்தைப் பேணிப்பாதுகாப்பதும் தெலுங்கு மொழி கற்பதற்கான வகுப்புக்களை நடத்துவதுமே இச்சங்கத்தின் நோக்கமென சங்கத்தைச் சேர்ந்த பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

பின்வருவோர் நடப்பு வருட நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் ஏ. எம். ராஜு உப தலைவர்கள்: கே. பொன்னுத்துரை, திருமதி லீலா சுப்பிரமணியம் காரியதரிசி சி. வி ஆர். ராவ். தனாதிகாரி: திருமதி. கவுரியாய் முனிரத்தினம்.

## வரி விளம்பரம்

### தேவை

விவசாய இரசாயனப் பொருட்கள் பற்றி அறிந்த அனுபவமுள்ள களஞ்சியப் பொறுப்பாளர் தேவை. பிணைப்பணம் ரூபா 2500|-. இருவர் உத்தரவாதமளிக்க வேண்டும். விண்ணப்பிக்கவும். ஒட்டோஸ் லிமிட்டெட், யாழ்ப்பாணம். 3218

ஆஸ்பியன் டீசல் எஞ்சினிலும் பிறேக் வேலையிலும் அனுபவமுள்ள மெக்கானிக் தேவை. க. சிவலிங்கம், 29, மானிப்பாய்வீதி, யாழ்ப்பாணம். 3216

லிகிதர் / ஆங்கில தட்டெழுத்து அடிப்பவர் (Clerk/Typist) தேவை. 5-7-71க்கு முன் பிரதி நற்சான்றுப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும். கௌரவ காரியதரிசி, மலாய இலங்கையர் சங்கம், 54, ஜும்மா பள்ளி வாசல் ஒழுங்கை, யாழ்ப்பாணம். 3215

### விற்பனைக்கு

EMI ரேப் றைக்கோடர், மின்சார மேசை விசிறி, கையில் கொண்டு செல்லக்கூடிய மின்னியக்க சிங்கர் தையல் மெஷின், கனோகமரு 35 M. M. விற்பனைக்குண்டு. சமுநாட்டுக்கு முன்பாகவுள்ள எல், பி. வி. அன் சன்ஸ் உடன் தொடர்பு கொள்ளவும். 3211

### காணவில்லை

இலட்சுமணர் அப்புத்துரை (மாஜி பொலிஸ் உத்தியோகத்தர்) வயது 48. நிறம் பொது. உயரம் 5 1/2 அடி. கறுப்பு நிற கோடு போட்ட வேட்டி அணிந்தவர். வீட்டிலிருந்து திடீரென மறைந்து விட்டார். இவரைப் பற்றிய தகவல் அறிந்தோர் ஆ. சாந்தகுலசிங்கம். சிவன் கோவிலடி, வட்டுக் கிழக்கு, வட்டுக்கோட்டை என்னும் முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். 3213

### வகுப்புகள்

7-ம், 8-ம், 9-ம், 10-ம் தர வகுப்புகளுக்கு கலை, விஞ்ஞான, கணித பாடங்கள் புதிய பாடத்திட்டத்தின் படி ஜூலை 1-ம் திகதி தொடக்கம் நடைபெறும். விபரங்களுக்கு: 36, 3-ம், குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம். 3214

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க

ராணி (யாழ்ப்பாணம்)
காலை 10-30 பி. ப. 2-00 மாலை 5-30
ரவிச்சந்திரன் - லட்சுமி
தங்கவேலு - விஜயஸ்ரீ
நடித்த
ஜீவநாடி

மனோகரா (யாழ்ப்பாணம்)
தினசரி காலை 10-30, பி. ப. 2. மாலை 5.30
முத்துராமன் லக்ஷ்மி, நாகேஷ் - ராஜினி நடித்த
நவக்கிரகம்

வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-00, பி. ப. 1-45, மாலை 5-30 மணி
★ சிவாஜிகணேசன்
★ ஜெமினி கணேசன்
★ சாவித்திரி
நடித்த
பாசமலர்

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாசா
திரைகளில்
★ சிவாஜிகணேசன் ★ வாணிஸ்ரீ
முத்துராமன்-சோ-மனோரமா குமாரி சச்சு
நடித்த
நிறைகுடம்

ராஜா (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-00, 5-30
சிவாஜி—பானுமதி
நடித்த
அறிவாளி

நாகம்ஸ்சினிமா
சுன்னாகம்
தினசரி பி. ப. 2-00, 5-45
நாகேஷ்-சௌகார் ஜானகி
நடித்த
கே. பாலசந்தரின்
நீர்க்குமிழி
காலை 10-30 காட்சி
James Mason
in
TIARA TAHITI

வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி பி ப 2-30, 6-00
எம்.ஜி.ஆர் - ஜெயலலிதா
நடித்த
கண்ணன்
என் காதலன்

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி பி.ப 2 30, 5-30
எம்.ஜி ஆர் - அஞ்சலிதேவி
நடித்த
சக்கரவர்த்தித்
திருமகள்

றீகல் — யாழ்ப்பாணம்
தினசரி காலை 10-30
பி .ப. 2-30
சிவாஜி-ஜமுனா-கண்ணாம்பா
நடித்த
மருதநாட்டு
வீரன்
Daily at 6-00 p. m
Burt Lancaster
in
SCALP HUNTERS
(Color)

யாழ். வின்ஸர் வெண்திரையில்
இன்று மட்டும் காலை 10-30, 2-00, மாலை 5-30
சகுந்தலை
28-6-71 நாளை முதல்
★ ஜெமினிகணேசன் ★ விஜயகுமாரி
★ நாகேஷ், ★ ரமாபிரபா ★ ராஜ்ஸ்ரீ ★ அசோகன்
நடிக்கும்
மனைவி மக்களோடு பார்த்து மகிழவேண்டிய படம்
மனைவி

"யங் ஹார்ட்ஸ்"
விளையாட்டுக் கழகம்
விரைவில் ஆரம்பம்
'ரொம்பொலகேம்ஸ்'
தினசரி வேளைகள்
பி. ப. 4-30 முதல்
இரவு 8-30 வரை
புதிய அங்கத்தவர்கள்
சேர்க்கப்படுவர்
பல்மேரு
கொற்றேஜ்
85, மெயின் வீதி,
யாழ்ப்பாணம்

YOUNG HEARTS
SPORTS CLUB
Commencing shortly
Daily sessions
of
TOMBOLA GAMES
from
4-30 P.M.—8-30 P.M.
MEMBERSHIP
Open
for New Members
PALMYRA COITAGE
85, Main Street,
Jaffna

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மேற்கு வங்காளச் சட்டசபை மீண்டும் கலைக்கப்பட்டது

## அரசியல் நெருக்கடி காரணம்

### மந்திரிசபை தொடர்ந்து இயங்கும்

புதுடில்லி, ஜூன் 26
மேற்கு வங்கச் சட்டசபை கலைக்கப்பட்டது. ஆனாலும் மந்திரிசபை தொடர்ந்து பதவியில் இருக்கும்.

மேற்கு வங்காளத்தில் அண்மைக்கால அரசியல் நெருக்கடியைத் தொடர்ந்து முதலமைச்சர் திரு. அஜாய் முகர்ஜியின் ஆலோசனையின் பேரில் சட்டசபை கலைக்கப்பட்டது. இங்கு அடிக்கடி அரசியல் நெருக்கடிகள் ஏற்பட்டு பொதுசன அமைதிக்கு பங்கம் ஏற்பட்டுவருவது தெரிந்ததே. 14 மாதங்களாக ஜனாதிபதி ஆட்சியிலிருந்த இம் மாநிலத்தில் கடந்த மார்ச் மாதம் நடந்த தேர்தலை அடுத்து, ஏப்பிரலில் கூட்டணி மந்திரிசபை அமைக்கப்பட்டது. மாநிலத்தில் அண்மையில் ஏற்பட்ட கோஷ்டி ஒன்றையடுத்து இளைஞர் காங்கிரஸ் 12 நாள் வேலைநிறுத்தம் ஒன்றை நடத்தியது.

சட்டசபை தனது கூட்டத்தொடரை ஆரம்பிப்பதற்கு இரண்டு நாட்களுக்கு முன்பாக சட்டசபை கலைக்கப்பட்டிருக்கிறது. சட்டசபை கலைப்புப் பற்றி ராஜ்ய மந்திரிசபை விரைவில் கூடி ஆராய விருக்கிறது.

இந்த சட்டசபைக் கலைப்பினால் மந்திரிசபை எந்த விதத்திலும் பாதிக்காதெனவும் மந்திரிசபை கலைக்கப்பட்டால் மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி ஏற்படவே வழிபிறக்குமெனவும் முதலமைச்சர் முகர்ஜி தெரிவித்தார்.

முதலமைச்சரின் ஆலோசனையின் பேரிலேயே சட்டசபை கலைக்கப்பட்டதாகவும், முதலமைச்சரும் ஆளுநரும் 70 நிமிட நேரம் பேச்சுவார்த்தை நடத்திய பின்பே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக ராஜ்பவனிலிருந்து வெளியிடப்பட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.

280 இடங்களைக்கொண்ட மேற்குவங்க சட்டசபையில் சபாநாயகரை தவிர்த்து 142 பேர் ஆதரவு கூட்டணி அரசுக்கு இருந்தது.

இச் சட்டசபை கலைப்புப் பற்றி எதிர்க்கட்சித் தலைவரும் மார்க்சியக் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவருமான திரு. ஜோதி பாசு கருத்துத் தெரிவிக்கையில் அரசாங்கத்திற்கு போதிய பலம் இல்லாத காரணத்தினாலேயே சட்டசபை கலைக்கப்பட்டது. அல்லாவிட்டால் அப்படிச் செய்யவேண்டிய அவசியமில்லை. அப்படிச் செய்யுமுன் எதிர்க்கட்சியினருக்கு சந்தர்ப்பமளிக்கப்பட்டிருக்கவேண்டும். இந்த நடவடிக்கையினால் ஜனநாயகம் ஒழிக்கப்பட்டிருப்பதோடு அரசாங்கத்திற்கு சாதகமான முறையில் செயல்பட்டிருக்கிறார்கள் என்பது வெளிப்படையாகத் தெரிகிறது என்றார்.

## பாக். கப்பலில் இராணுவசாதனங்கள்

### அமெரிக்க அதிகாரிஊர்ஜிதம்

நியூயோர்க், ஜூன். 26
அமெரிக்காவிலிருந்து புறப்பட்டுச்சென்ற 'பத்மா' என்னும் பாகிஸ்தான் கப்பல் இராணுவ சாதனங்களை ஏற்றிச்செல்கிற தென்பதை இராஜாங்க இலாகாவைச் சேர்ந்த ஓர் அதிகாரி ஏற்றுக் கொண்டிருக்கிறார்.

இந்தக்கப்பலில் இரண்டாயிரம் சுற்றுக்கான, வெடிமருந்துகளையும், விமானம் மற்றும் இராணுவ சாதனங்களுக்கான உதிரிப் பாகங்களையும் இக்கப்பல் எடுத்துச் செல்வதாகச் சொல்லப்படுகிறது. இந்தக் கப்பலில், சிறிய மாதிரி விமானங்கள் இல்லை என்று தன்னால் உறுதியாகச் சொல்ல முடியாதெனவும், ஆயுத விநியோகம்பற்றிய விஷயத்தை அரசு ஆராய விரும்புவதாகவும் அந்த அதிகாரி தெரிவித்தார்.

இந்தக் கப்பலில் சிறிய விமானங்கள் எதுவும் இருக்கவில்லை என இதற்கு முன்பாக இன்னோர் அதிகாரி கூறியிருந்தார்.

## மதுவிலக்கு ரத்துபற்றி ஈ. வெ. ரா. மகிழ்ச்சி

### 'துரதிருஷ்டம்' என்கிறார் ராஜாஜி

சென்னை, ஜூன் 26
தமிழ்நாட்டில் மதுவிலக்கு ரத்துச் செய்யப்பட்டிருப்பது சம்பந்தமாக ஈ. வே. ரா. ராஜாஜி போன்றவர்கள் கருத்து வெளியிட்டிருக்கிறார்கள்.

இது மிகவும் மகிழ்ச்சியான செய்தி, அவசியமான பாராட்டத்தக்க காரியம் என்று ஈ.வே.ரா. பெரியார் கூறினார்.

"இந்தக்காரியத்தை துணிச்சலுடன் செய்த தமிழ்நாடு அரசுக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்" என்றும் பெரியார் தெரிவித்தார்.

ராஜாஜி கவலை

மதுவிலக்கு ரத்தானது துரதிருஷ்டவசமானது என்று முதுபெரும் ராஜதந்திரியும், சுதந்திரக்கட்சித் தலைவருமான திரு. சி. ராஜகோபாலாச்சாரியார் கூறினார்.

இந்தியா முழுவதும் மதுவிலக்கு பற்றி பொதுவான கொள்கை அமுல்நடத்தப்படவேண்டும் என்று முதலமைச்சர் கருணாநிதி கூறுகிறார் மற்றவர்களுக்கு நாம் தான் வழிகாட்டிகளாய் இருக்க வேண்டும் என்று ராஜாஜி கூறுகிறார்.

சுதந்திரக்கட்சியைச் சேர்ந்த டாக்டர் ஹாண்டே கூறியதாவது:- திரு. அண்ணாதுரை முதலமைச்சராய் இருந்தபோது, மதுவிலக்கை ரத்துசெய்யமாட்டேன்' என்று அறிவித்திருந்தார் அண்ணா வழியில் நடப்போம் என்று கூறிக்கொண்டு அவரது முடிவுக்கெதிராக மதுவிலக்கை ரத்துச்செய்கிறார்கள் என்றார்.

தமிழ்நாடுமேல்சபை எதிர்க்கட்சித் தலைவர் திரு ராஜாராம் கூறியதாவது:

50 ஆண்டுகளாகக்கட்டப்பட்டுவந்த கோட்டையை முதலமைச்சர் ஒரு நிமிடத்தில் இடித்துத் தள்ளிவிட்டார் வருவாயை அதிகமாக்க புதிய வரிகளை விதித்திருப்பதுடன் மதுவிலக்கையும் ரத்துச்செய்திருப்பது குதிரை கீழே தள்ளியதுடன் குழியும் பறித்த கதையாயிருக்கிறது என்றார்.



## அறுவைச்சிகிச்சைக்கு அதிசயமான ஒளிக்கத்தி

லண்டன், ஜூன் 26
இரத்தம் சிந்தாமல் நுட்பமான சத்திர சிகிச்சைகளை மேற்கொள்ளும் அதிசயமான லேசர் ஒளிக் கத்தி ஒன்றை பிரிட்டிஷ் விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். இக்கத்திமூலம் மென்மையான அவயவங்களிலும் நுணுக்கமான சத்திர சிகிச்சைகளை வெற்றிகரமாக மேற்கொள்வது இப்பொழுது சாத்தியமாகியுள்ளது. அபார சக்திவாய்ந்த இந்த ஒளிக்கதிர் தான் அறுத்துச் செல்லும் இடங்களை அழுத்திவிடுவதால் இரத்தம் வெளியேறுமல் தடுக்கப்படுகிறது.

மிகக் கூர்மையான அதிக சக்தியைக் கொண்ட ஒளி அலைகள் தான் லேசர் கதிர் என்றழைக்கப்படுகிறது. 1960-ம் ஆண்டளவில் இந்த சக்தி கண்டுபிடிக்கப்பட்டபோது இதனை எவ்விதம் பயன்படுத்துவது என்று புலனாகவில்லை. ஆனால் இப்பொழுது லேசர் ஒளி வைத்தியத் துறையில் இது நன்கு பயன்படுத்தப்படுகிறது.

கண் சிகிச்சையில் லேசர் கதிர்கள் பெருமுதவி செய்கின்றன. கண் பார்வை இழந்தோர் மீண்டும் கண் பார்வை பெற நடாத்தும் சிகிச்சையில் லேசர் சாதனம் பயன்படுகிறது. லண்டனில் கண் வைத்திய ஆராய்ச்சி தாபனத்தின் பேராசிரியர் திரு. பார்சின்ஸ், கண் நோயினால் பாதிக்கப்பட்ட அறுவருக்கு லேசர் கதிர்களைக் கொண்டு வெற்றிகரமாக அறுவைச் சிகிச்சை செய்திருக்கிறார்.

முந்திய அறுவைச் சிகிச்சைகளினால் செய்யமுடியாத வேலைகளை லேசர் கதிர்களினால் செய்துவிடலாமென வைத்திய விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். இந்த லேசர் ஒளி அலைகள் மூலம் கண்ணுக்குள் இருக்கும் திரையின் எந்தக் குறிப்பிட்ட பகுதியையும் வெட்ட முடியும், எந்தவித நுண்ணிய கிருமிகளையும் இதனைக் கொண்டு அகற்றிவிடலாம்.

மூளையில் ஏற்படும் சிற்சில விதமான கட்டிகளையும் மூளைகளையும் அகற்றவும் இந்த லேசர் கதிர்கள் உதவுகின்றன. ஆயுதங்களைப் பிரயோகிக்க முடியாத பாகங்களில் சிகிச்சை செய்யவும் இவை உகந்தவை. இக்கதிர்கள் எந்த வளைவு நெளிவுகளுள்ளும் புகுந்து வெளிவரக் கூடியவை. இதனால் உடலில் எட்டாத பகுதிகளே இல்லை என்று கூறுமளவுக்கு லேசர் சாதனம் புரட்சிகரமான முறையில் ஆக்கப்பட்டிருக்கிறது.

......

### 'ஆலயச் சிறப்பு'

அரியாலை, சனி
"அறிவு ஞானம் பெற்ற பெரியோர்களும் ஆலய வழிபாடு அவசியம் என்பதைக் காட்டுவதற்காகவே நாயன்மார்கள் பல ஆலயங்கட்கு யாத்திரை செய்து பாடிப் பரவி ஆலயத்தின் பெருமையை உணரச் செய்தார்கள். அமைதியோடு வழிபட வாய்ப்புத் தருமிடம் ஆலயமே. பசுவின் பால் அதன் உடலெங்கும் செறிந்திருந்தாலும் அதன் மடியில் இருந்துதான் எடுப்பது போல் ஆண்டவன் அருளை ஆலயத்திலிருந்து தான் சிறப்பாகப் பெற முடியும்"

இவ்வாறு வண்ணை வீரமாகாளி அம்மன் ஆலயத்தில் நேற்றையதினம் பிரம்மஸ்ரீ வை. நித்தியானந்த சர்மா ஆலய வழிபாடு பற்றிக் கூறுகையில் விளக்கினார்.

### களவுபோன விக்கிரகம் கண்டுபிடிப்பு

புதுடில்லி ஜூன் 26
சாம்பாவிலிருந்து களவுபோன வெங்கல விக்கிரகம் பம்பாயில் கண்டெடுக்கப்பட்டிருப்பதாக லோகசபையில் உள்துறை அமைச்சர் தெரிவித்தார். இந்த வெங்கல விக்கிரகம் 6 ஆயிரம் ஆண்டுகள் பழமையானது. பம்பாயில் கண்டெடுக்கப்பட்ட விக்கிரகம் சாம்பாவிலிருந்து களவுபோன விக்கிரகம்தான் எனவும் திருடியவர்களைக் கண்டுபிடிக்கும் முயற்சியில் பொலிசார் ஈடுபட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## கருணாநிதி பெயரில் அறக்கட்டளை

### வயதான கலைஞர்களுக்கு உதவி

சென்னை, ஜூன் 26
முன்பு வசதியுடன் வாழ்ந்து இப்பொழுது வறுமையில் வாழும் சினிமா நடிக நடிகைகளுக்கு உதவும் முகமாக தமிழக முதல்வர் திரு. மு. கருணாநிதியின் பெயரால் 'அறக்கட்டளை' ஒன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது.

இந்த அறக்கட்டளையிலிருந்து கஷ்டப்படும் 5 பழைய நடிகர்களுக்கு சமீபத்தில் உதவித்தொகை வழங்கப்பட்டது. இவர்களில் பழைய நடிகை அங்கமுத்துவும் ஒருவர்.

முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளையொட்டி சினிமா உலகப் பிரமுகர்கள் ஒரு லட்சம் ரூபாய் திரட்டி திரு. கருணாநிதியிடம் கொடுத்திருந்தனர். இந்தப் பணத்தில் தமது சொந்த ஊரான திருவாரூர் உயர் நிலைப்பள்ளிக் [illegible] எடுத்துக் கொண்டு மீதியை முன்பு புகழுடன் வாழ்ந்து இப்போது வறுமையில் வாழும் வயதான கலைஞர்களுக்கு வாழ்வளிக்க பயன்படுத்தும்படி முதல்வர் திருப்பிக் கொடுத்து விட்டார்.

இந்தப் பணத்தைக் கொண்டு கருணாநிதி அறக்கட்டளை அமைக்கப் பட்டது. இந்த அறக்கட்டளைக்கு கோவை மாவட்டப் அதிபர்கள் ரூ. 10 ஆயிரமும் உலகத்தமிழ் மாநாடு ஊர்வலக்குழு ரூ 7 ஆயிரம் கொடுத்தனர். இந்தப்பணத்தின் மொத்தத் தொகையிலிருந்து கிடைக்கும் வட்டியைக் கொண்டு முதல் கட்டமாக நடிகை அங்கமுத்து, கதைவசனகர்த்தா இளங்கோவன், படஅதிபர் ராமநாதன் செட்டியார் (நெப்டியூன் ஸ்ருடியோவை அமைத்தவர்). பாடல் ஆசிரியர்கள் கம்பதாஸன், சுரதா ஆகிய கலைஞர்களுக்கு மாதம் ரூ. 100 உதவிப் பணம் வழங்க முடிவு செய்யப்பட்டது.

இவர்கள் உதவிப்பணம் வழங்கும் விழா அண்மையில் நடந்தது. இதனை ஆரம்பித்து வைக்க வரும்படி திரு. கருணாநிதியை அழைத்தனர். ஆனால் தமது பெயரில் உள்ள அறக்கட்டளையை தாமே ஆரம்பித்து வைப்பது நன்றாக இருக்காதென்று கவர்னர் திரு. ஷா இதனைத் தொடங்கி வைப்பதே சிறப்பாக இருக்கும் என்று திரு. கருணாநிதி தெரிவித்தார். இதைத் தொடர்ந்து கவர்னர் இதனை ஆரம்பித்து வைத்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'செலக்ஷன் கிரேட்' அதிபர்கள் தெரிவு பாரபட்சமானதாம்

## முதல்தர, அதிஉயர்தர அதிபர்கள் ஆட்சேபம்

கோட்டை, சனி

தெரிவுத்தர அதிபர்கள் தெரிவு செய்யப்பட்ட முறையை எதிர்த்து முதலாந்தர, அதி உயர்தர அதிபர்கள் சங்கம் கல்வியமைச்சுக்கு ஆட்சேபம் தெரிவித்துள்ளது.

சமீபத்தில் கொண்டுவரப்பட்ட இத்தெரிவுத் தரம் அதிபர்கள் தரங்கள் யாவற்றிலும் உயர்ந்தது. அத்துடன் இந்த அதிபர்களின் சம்பளம் 2-ம் தரக் கல்வி அதிபர்களது சம்பளத்தை ஒத்தது.

மேற்படி சங்கம் ஆட்சேபம் தெரிவித்து எழுதிய கடிதத்தில் மேலும் குறிப்பிட்டிருப்பதாவது:

"இந்தத் தெரிவு அதிபர்களைத் தேர்ந்தெடுத்த குழு மத்திய கல்லூரிகளை நிறுவுவதற்குத் தம்மை அர்ப்பணித்து முன்னின்று உழைத்த அதிபர்களின் மதிப்பிடற்கரிய சேவைகளைக் கவனிக்காது விட்டு விட்டது. சிறந்த அனுபவமும், ஆற்றலும், முதிர்ச்சியும் உள்ள ஆசிரியர்களை விடுத்து அனுபவமற்ற வயது குறைந்தவர்களுக்கே குழு முதன்மையளித்துள்ளது."

முதலாம் தர அதி உயர்தர அதிபர்கள் சங்கம் மேற்படி நியமனத்தை தங்களது பிரதிநிதிகள் முன்னிலையில் ஹசன் கமிட்டியின் சிபார்சின் அடிப்படையில் மறுபரிசீலனை செய்யுமாறும் கடிதத்தில் வற்புறுத்தியுள்ளது.

# தேரோடும்வீதியை செப்பனிட்டனர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

அச்சுவேலி நாவலம்பதி காட்டுமலைக் கந்தசாமி கோவில் தேரோடும் வீதியைச் செப்பனிடும் சிரமதானப் பணியை வலிகாமம் கிழக்கு காரியாதிகாரி திரு கந்தப்பிள்ளை ஆரம்பித்து வைத்தார்.

தற்போது நிர்மாணிக்கப்பட்டிருக்கும் புதிய தேர் வீதிவலம் வருவதற்கு ஏற்ற முறையில் வீதிகளை திருத்தியமைக்கும் சிரமதானப் பணியில் அநேக வாலிபர்கள் ஆர்வத்துடன் கலந்து கொண்டனர்

காரியாதிகாரி திரு. கந்தப்பிள்ளை, தொண்டர்களைப் பாராட்டியதுடன், மேற்படி ஆலயதேர்திருப்பணி வேலை சிறப்பாக நடத்தி முடித்ததை குறித்தும் மகிழ்ச்சி தெரிவித்தார்.

காரியாதிகாரியும், அச்சுவேலி கிராமசேவகர் திரு. சோமசுந்தரமும், ஆலய முகாமையாளர் திரு. சி. சிவகுருவினால், சமயாசார முறைப்படி வரவேற்கப்பட்டனர்.

# வடபிரதேச வேலைகளுக்கு எட்டரை லட்சம் ஒதுக்கீடு

யாழ்ப்பாணம், ஞாயிறு

இந்த வருடம் வடபிரதேசத்திற்கு எட்டரை லட்சம் ரூபா அபிவிருத்தி வேலைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது இப் பிரதேசத்தில் 7 பொறியியலாளர் பிரிவு உண்டு. இந்த வருடம் ஒன்றரை லட்சம் ரூபாவிற்கு மட்டுமே இங்கு வேலை நடைபெற்றுள்ளது

யாழ் மாவட்ட பயிர்ச்செய்கைக் குழுக்கள் சம்மேளனக் கூட்டத்தில் வட பிராந்திய நீர்ப்பாசன அதிபர் திரு. விக்ரமசிங்கா பேசும்போது மேற்கண்டவாறு கூறினார்.

யாழ் அரசாங்க செயலக மண்டபத்தில் நற்றுமாலை திரு. ஆ. கனகசபை தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் தொற்காணி சட்ட ஆக்க சிரேட்ட உதவி ஆணையாளர் திரு பி. எல். என் டி. சில்வாவும் கலந்து கொண்டார்.

திரு விக்கிரமசிங்கா மேலும் கூறியதாவது:

நீர்ப்பாசன இலாகா கந்தோர்களை இவ்வருடம் நடுப்பகுதியில் பொறுப்பேற்ற கந்தோர்களில் புதிய நியமனங்கள் செய்யப்பட்டன கடந்த மார்ச் மாதத்தின் இங்கு பொறியியலாளர் நியமனம்செய்யப்பட்டார். அதனால்தான் வேலைமதிப்பு எடுக்க காலதாமதமேற்பட்டது.

5000 ரூபாவிற்கு உட்பட்ட வேலைகளை பெரிய கந்தோரின் அனுமதியின்றி அந்தந்த பகுதியில் செய்யலாம் அவசரவேலையாக இருந்தால் 5000 ரூபாவிற்கு உட்பட்ட வேலைகளை உடனடியாகச் செய்யலாம்.

வடபிரதேசத்தின் அபிவிருத்தி வேலைகளுக்கு எட்டரை லட்சம் ரூபாவிற்கு கடன் கொடுக்கக்கூடிய நிலைமை இருக்கிறது. அதற்கு பயிர்ச்செய்கைக் குழுக்கள் சரியானமுறையில் நடந்துகொள்ள வேண்டும். சில பயிர்ச்செய்கைக் குழுக்கள் வேலைகளை பொறுப்பேற்ற வேலையை ஆரம்பித்தவுடன் அடிக்கடி தவணை எடுப்பதால் வேலையில் தாமதம் ஏற்படுகிறது.

# 4 வீடுகள் எரிந்து சாம்பராயின

## கரவெட்டியில் சம்பவம்

பருத்தித்துறை, சனி

கரவெட்டி கிழக்கு யார்க்கருவைச்சேர்ந்த எம் தங்கராசா என்பவருக்குச் சொந்தமான நான்கு வீடுகள் தீக்கிரையான பரிதாப சம்பவம் நேற்று முன்தினம் நடைபெற்றது. இரு நாட்களுக்குமுன் பிரசவித்த தமது மனைவிக்கு வெந்நீர் வைத்த பொழுது தீப்பொறி காற்றில் பறந்து சென்று பெரு நெருப்பை ஏற்படுத்தியதாம். வீட்டின் ரொக்கம், நெல், மிளகாய், ஒடியல்கள், வரகுமூடைகள், மற்றும் பொருட்கள் உடுப்புகள் உட்பட வீட்டிலிருந்த எல்லாமே எரிந்து சாம்பராயினவாம். தாயும் தந்தையும் தக்க சமயத்தில் காப்பாற்றப்பட்டனர். வீடுகளுக்கு அண்மையிலிருந்த வைக்கோல் போர்களும் சாம்பராயின. இச் சம்பவம் பற்றிச் சமூக சேவைப்பகுதியினருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

# 'எல்லாருக்கும் நல்லவராக வாழ்ந்தவர் மகாகவி'

யாழ்ப்பாணம், ஞாயிறு

'எல்லாருக்கும் நல்லவராக வாழ்ந்தவர் கவிஞர் மகாகவி' என்று யாழ் இலக்கிய வட்டம், திரு து. உருத்திரமூர்த்தியின் மறைவு குறித்து விடுத்திருக்கும் அனுதாபச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

இந்த அனுதாபச் செய்தியில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது "மகாகவிமறைவு ஈடுசெய்ய முடியாத மறைவு. ஈழத்து எழுத்துலகத்தை எதிர்பாராத விதமாக துன்புறுத்திய மறைவு. ஈழத்து மறுமலர்ச்சிக்காலம் முதல் அவரது கவிதைகள் மணம்கமழத் தொடங்கின புதிய சிந்தனை, புதிய உத்தி முறை புதிய சொற்பிரயோகங்கள் அவரது படைப்புகளின் தனித்தன்மைகளாகும்.

தனிப்பட்ட முறையிலும் கூட்டாகவும் ஈழத்துக்கவிதை இலக்கியத்தை வளர்க்க அவர் எடுத்துக்கொண்ட முயற்சிகளின் தரம் மிக உயர்ந்தது.

கவிஞனுக்கே உரிய பரந்த மனப்பான்மை, நல்லதைப் போற்றும் நேர்மை இளைஞர்களை ஊக்குவிக்கும் ஆர்வம், அனைத்தும் திகழப் பெற்று குறைவாதறியாக் கவிஞராக விளங்கி எல்லாருக்கும் நல்லோனாக வாழ்ந்த மகாகவி இன்று எம் மத்தியில் இல்லை என்பதனை எம்மால் எள்ளளவும் ஏற்க முடியவில்லை.

# உப-நூல்நிலையங்கள் ஆரம்பிக்க வேண்டும்


யாழ்ப்பாணம் ஞாயிறு

மாநகரசபை எல்லைக்குள் இருக்கும் சகல வீடுகளிலுமுள்ள வாளி மலசலகூடங்களையும் நீரமைப்பு மலசலகூடமாக மாற்றக் கட்டாய நடவடிக்கை எடுப்பதோடு இவ்விடத்தில் உடன் ஒவ்வொரு வட்டாரத்திலும் எவ்வளவு குடியிருப்பாளர்கள் உடன் நீரமைப்பு மலகூடமாக மாற்ற வசதியுடையவர்கள் என்ற விபரங்களை உடன் திரட்ட நடவடிக்கை எடுக்கவேண்டும்.

யாழ்ப்பாணம் மாநகரசபைக் கூட்டத்தில் திரு. தம்பு கந்தையா கொண்டுவந்த மேற்கண்ட தீர்மானம் நிறைவேறியது. இத்தீர்மானம்பற்றி திரு ஏ போல்ராஜ் பேசுகையில் பாஷையூர். குருநகர் பகுதிகளில் குழிமலகூடங்கள் அமைக்க முடியாதென்றும் அதுபற்றி கவனம் செலுத்தவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார். இவ்விஷயம்பற்றி ஆலோசித்து முடிவுசெய்யப்படும் என மேயர் தெரிவித்தார்.

திரு தம்பு கந்தையா கொண்டுவந்த கீழ்க்காணும் தீர்மானமும் நிறைவேறியது மாநகரசபையின்பின் தங்கிய வட்டார மக்களின் கல்வி, கலை, கலாச்சார நடவடிக்கைகளை விருத்தி செய்யுமுகமாக் சபையின் ஆதரவுடன் நிர்வகிக்கக்கூடிய முறையில் உபநூல் நிலையங்களை அவ்வப்பகுதி மக்களின் உதவியுடன் ஆரம்பிப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்.


# காய்ச்சல், சளிசுரத்தைச் சகித்துக் கொண்டு வீணுகச் சங்கடப்பட வேண்டாம்




# டிஸ்பிரின் உட்கொண்டு அதிதுரித நிவாரணம் பெறுங்கள்

உங்களுக்குக் காய்ச்சல், சளிசுரம் வந்தால்

★ ஓய்வெடுங்கள்

★ உடம்பைச் சூடாக வைத்திருங்கள்

★ நீர் ஆகாரம் சாப்பிடுங்கள்

★ 4 மணித்தியாலத்துக்கு ஒரு தடவை 2 டிஸ்பிரின் மாத்திரை உட்கொள்ளுங்கள்

காய்ச்சல், சளிசுரம் வரும் போது காய்ச்சலைக் குறைக்கும் மருந்துகளைக் கிரமமாகப் பாவிக்க வேண்டியிருக்கும். கிரமமாகப் பாவித்தால், சில மருந்துகள் பெரும் பாதக விளைவுகளைக் கொடுக்கக் கூடும். டிஸ்பிரின் முற்ருகக் கரைவதாகையால், கரையாத மற்ற மருந்துகள் போல, உடம்புக்குப் பாதகமான துகள்களை வயிற்றில் விட்டு வைப்பதில்லை. சில புதிய மருந்துகளிற் போல, பாதக விளைவுகளை ஏற்படுத்தும் சேர் பொருள்களும் டிஸ்பிரினிற் கிடையாது. எனவே எவ்வித பயமுமின்றி டிஸ்பிரின் உட்கொள்ளலாம்.

டிஸ்பிரின் அதிதுரித நிவாரணம் தரும்

டிஸ்பிரின் மிக விரைவாகவும் முற்ருகவும் கரைந்து இரத்தோட்டத்திற் சீக்கிரம் செறிகிறது. இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிவதால் மிக வேகமாக உடம்பிற் செயலாற்றி உங்களுக்கு அதிதுரித நிவாரணம் தருகிறது. அதனுல்தான் உலகமெங்குமுள்ள வைத்திய நிபுணர்கள் அதிதுரிதமான அதிவன்மையான நிவாரணத்துக்கு டிஸ்பிரினைச் சிபாரிசு செய்கிருர்கள்.

தலைவலி, நோவு, சளிசுரம், காய்ச்சல், தடிமல், மாதவிடாய் வலி, வாத நோவுகளிலிருந்து அதிதுரிதமான அதிபாதுகாப்பான நிவாரணம் பெற டிஸ்பிரின் பாவியுங்கள்.

2 மாத்திரைகளை நீரிற் கரையவிட்டு அல்லது முழுமையாக ஏதாவது பானத்துடன் உட்கொள்ளுங்கள்.

குழந்தைகளுக்கு: பெட்டியிலுள்ள அளவுப் பிரமாணங்களைப் பாருங்கள்.

றெக்கிட் அன்ட் கோல்மன் உற்பத்தி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "6 நாள் போதனையினால் கல்வித்தரம் உயரும்"

## மகாஜனவில் திரு. சுமதிபாலா உரை

மாவிட்டபுரம் சனி

'ஆசிரியர்களுக்குச் சம சம்பளம் என்ற முறை வந்தால்தான் கல்வி வளர்ச்சி அடையும். அத்துடன் மாணவ ஆசிரியரதும் பின் தங்கிய பகுதி ஆங்கில ஆசிரியர்களதும்சம்பளமும் உயர வேண்டும்.'

இவ்வாறு தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரிப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொண்டு உரைநிகழ்த்துகையில் கல்வி இலாகா மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. கே எச் எம் சுமதிபாலா கூறினர்.

'இன்று நமது நாட்டில் கல்வித்துறையில் 50 கோடி ரூபா செலவிடப்படுகிறது. இப்பணத்தில் 5 வீதபணமே மாணவர்களுக்குப் பயன்படுகிறது. 95 வீதமும் ஆசிரியர்களுக்கு சம்பளமாக வழங்கப்படுகிறது. அப்படியிருந்தும் ஆசிரியர்களுக்குச் சம்பளம் போதாது உள்ளது' என்றும் அவர் சொன்னர்.

கல்லூரி அதிபர் திரு எம் மகாதேவா விழாவுக்குத் தலைமை வகித்தார். திரு சுமதிபாலா மேலும் பேசியதாவது: இன்றைய மாணவ சமுதாயம் நல்ல முறையில் வழிநடத்தப்படுமுகமாக கல்விமுறை புனரமைப்பு செய்யப்பட இருக்கிறது. க. பொ. த வகுப்புப் பரீட்சை எடுக்கும் மாணவர்கள் இனிபொதுப் பரீட்சையும் பயிற்சியும் பெற்று பின் பல்கலைக்கழகத்தில் பட்டப் படிப்பு பெறத்தக்கதாகக் கல்வி புனரமைப்புச் செய்யப்படும். இனி கலை, விஞ்ஞானம் என்ற நிலை மாறி எண்கணிதம், கணிதம் கட்டாயமாகவும் ஒரு மொழி 2-வது கட்டாயபாடமாகவும் படிக்கவேண்டும். 6-ம் வகுப்புமுதல் கல்வி அமைப்பில் மாற்றம் நிகழும். ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைகளும் புனர் அமைப்புச் செய்யப்பட்டு அதிக ஆசிரியர்களுக்கு புதிய முறையில் பயிற்சி அளிக்கப்படவுள்ளது.

நல்லூர் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை வசதியற்று இருப்பதால் அதனை மூடுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. இதேபோல தென் இலங்கையிலும் சில ஆசிரிய பயிற்சிக் கலாசாலைகள் மூடப்படுகின்றன. நல்லூர் பயிற்சிக் கலாசாலை மூடப்பட்டு கொழும்புத்துறைஆசிரிய பயிற்சிக் கலாசாலை சகதிவாய்ந்த பயிற்சி கலாசாலையாக மாற்ற அரசு திட்டமிட்டுள்ளது.

### 6 நாள் கல்வி முறை

"6 நாட்கள் பாடசாலை நடத்தும் திட்டம் பற்றிப் பலவிதமாகப் பேசப்படுகிறது. தென்கிழக்காசிய நாடுகளில் 6 நாள் கல்வி நடைமுறையில் உள்ளது. ஆனால் 5 நாள் பாடசாலை நடைபெறுகிறது. இந்தியாவில் 6 நாள் கல்விபோதிப்பதால் கல்வி முன்னேறியுள்ளது. போதனை நாட்களைக்கூட்டுவதன் மூலம் கல்வித்தரத்தை உயர்த்தலாம்.

இன்று இங்கு பரப்பப்படும் வீணை வதந்திகளால் நாம் விரும்பும் சமூகத்தைகட்டி எழுப்புவது தடையாகலாம் எதிர்ப்புக்காட்டினுல் கல்விபுனரமைப்புக்குத் தடையேற்படலாம். இதனால் கஷ்டப்படவேண்டி ஏற்படும். ஆகவே புதிய அமைப்பை ஏற்படுத்த சந்தர்ப்பம் தரவேண்டும்"

### துரையப்பாபிள்ளை

கல்லூரியின் ஸ்தாபகர் காலஞ்சென்ற துரையப்பா பிள்ளையை திரு. சுமதிபாலா புகழ்ந்துபேசினர். அவர் குறிப்பிட்டதாவது:

கல்வித்துறையின் வளர்ச்சியில் அயராது உழைத்துக் கஷ்டப்பட்டுவரும் வடபகுதி மக்களுக்கு நல்லகல்வி யளித்ததுடன் மகாஜன போன்ற முதல் தரமான கல்லூரியை எழுப்பி வடக்குக்கு மட்டுமலாது அகில இலங்கையிலும் கல்வி வளர்ச்சிக்கு உதவிய துரையப்பாபிள்ளை ஆறுமுகநாவலருடன் வைத்து எண்ணத்தகுந்தவர். துரையப்பா பிள்ளையும் அவரது புதல்வரும் இந்தக்கல்லூரியை வளர்த்தனர். இன்று அதிபர்கள் கல்லூரிகளின் வளர்ச்சிக்கு உழைக்காதவாறு சட்டங்கள் அமைந்துள்ளதாகக் கூறப்படுகிறது. இது ஒரு துரதிர்ஷ்டமே. அதிபர்கள் இனிமேல் தமதுகல்லூரிகளை அபிவிருத்திசெய்ய அதிகாரம் வழங்குவதுபற்றி அரசு யோசித்துவருகிறது."

ஸ்தாபகர் நினைவுநாட் பேருரை நிகழ்த்தியதை அடுத்து கல்லூரி மாணவ மாணவிகளின் கலைநிகழ்ச்சிகள் இடம் பெற்றன.

செல்வி நடீன் நடராசா, வரவேற்புரை நிகழ்த்தினர். திரு. சி. இலங்காநேசன் நன்றி தெரிவித்துப் பேசினர். பிரதம விருந்தினர்களாக கல்லூரி முன்னுள் அதிபர் தெ. து. ஜெயரத்தினமும் பாரியாரும் கலந்து கொண்டனர்.

---

நயினாதீவு

## யாத்திரிகர் தொண்டர் சபையும் அதன் சேவைகளும்

"அன்பர் பணி செய்ய என்னை ஆளாக்கிவிட்டு விட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும் பராபரமே? என்பது பெரியோர் வாக்கு பிறர்க்குச் சேவைபுரிதலே பிறவியின்பயன் என்பது முதுமொழி இவற்றினை இலட்சியமாகக்கொண்டு பணியாற்றி வருவது நயினாதீவு யாத்திரிகர் தொண்டர் சபையாகும்.

இச்சபை சுமார் 32 வருடங்களுக்கு முன்னர் பல பெரியார்களின் முயற்சியினல் ஆரம்பிக்கப்பட்டது நாகம்மாள் ஆலய தரிசனத்திற்கு வரும் அடியார்களுக்குச் சேவை புரிவதற்காகவே இது ஆரம்பிக்கப்பட்டது. அக்காலத்தில் தீவுப்பதிக்குக்கும் பிரயாணஞ் செய்த மக்கள் அடைந்த இன்னல்கள் பல இன்றுகூட தீவுப் பகுதிப் பிரயாணம் கஷ்டமானதாக இருக்கும்போது முப்பதுவருடங்களுக்கு முன்னர் எவ்வாறிருந்திருக்குமென்பதை நாம் உணர்ந்து கொள்ளமுடியும். இவ்வாறு பல்வேறு கஷ்டங்களுடனும் அம்பாளைத் தரிசிக்கவரும் அடியார்களுக்கு வேண்டிய உதவிகளைச் சபைதொடர்ந்து செய்து வருகின்றது. யாத்திரிகர்களுக்கு வழிகாட்டல் அவர்கள் வள்ளங்களிலிருந்து இறங்க ஏற உதவி புரிதல் இழந்த பொருட்களையும் குழந்தைகளையும் மீட்டுக்கொடுத்தல் போன்ற தொண்டினைச்சபை தொடர்ந்து செய்து வருகின்றது.

அத்துடன் உற்சவகாலத்தில் கடமையாற்றும் பொலிஸாருடன் சேர்ந்து குற்ற நிகழ்ச்சிகள் நடைபெறுவண்ணம் சபையின்தொண்டர்கள் பணியாற்றிவருகின்றனர். பெருந்தொகையாக மக்கள் கூடும் இடங்களில் அவர்களின் போக்குவரவு ஒழுங்கு சுகாதார ஒழுங்கு முதலியவற்றையும் மற்றும் முக்கிய விஷயங்களையும் சபையார் ஒலிபெருக்கி மூலம் அறிவித்து மக்களுக்கு உதவுகின்றனர்.

சபையின் சேவையின் சின்னமாக அம்பாளின் தெற்குவீதியில் தொண்டர் சபைக் கட்டிடம் அமைந்துள்ளது. உற்சவகாலத்தில் மட்டுமே இது சபையினரால் உபயோகிக்கப்படுகின்றது. ஏனைய காலங்களில் யாத்திரிகர் தங்கிச் செல்லச்சபையார் அனுமதித்துள்ளனர். அங்கு தங்கிச் செல்லவிரும்பும் அடியவர்கள் ஆலயப் பொறுப்பாளரிடம் அதன் சாவியைப் பெற்றுத்தங்கிச் செல்லலாம்.

இவ்வாண்டு உற்சவத்தின் போதும் தொண்டர் சபையார் பரந்த அளவில் தமது சேவையினைச் செய்ய அம்பாளின் திருவருள் கூடுவதாக.

சைவப்புலவர்
நா. விசுவலிங்கம்
(சபைத்தலைவர்)

---

## 'அதர்மத்தின் அழிவுக்கு மகாபாரதம் ஓர் உதாரணம்'

— பண்டிதை தங்கம்மா

தாவடி, சனி

"வானுலகில் தேவர்கள் இருப்பதாகக் கதைகள் கூறுகின்றன. ஆனல் மனிதருள்ளே தேவர்களும் அரக்கர்களும் இருக்கின்றார்கள். நல்லவர்கள் ஒருசிலர் வாழுமுலகின்கண்ணே கெட்டவர்கள் கூடுதலாகவுள்ளனர். நாட்டிலும், நகரிலும் ஊரிலும் நல்லவர்கள் குறைவாகவும் கெட்டவர்கள் கூடுதலாகவும் வாழ்வதை நாம் காணலாம்"

இவ்வாறு செஞ்சொற் செம்மணிபண்டிதை செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி கொக்குவில் மாதகலை முருக மூர்த்தி ஆலய உற்சவத்தில் சொற்பொழிவாற்றிய போது கூறினர்.

திரு. ஷண்முக குமரேசனின் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் மேலும் பேசிய பண்டிதை செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி கூறியதாவது:

தருமம் நிலைக்கும் அதர்மம் அழிந்துவிடும். ஆனல் அதர்மவழியில் செல்வோர் முதலில் வெற்றிபெறுவர். ஆனல் அது நிலையான வெற்றியல்ல. ஏனெனில் பாரதக்கதையிலே வருகின்றோர்கள் நல்லோர் ஐவர் தீயோர் நூற்றுவர் தீயோர் முதலில் இன்பமடைந்திருக்கலாம் ஆனல் முடிவில் நல்லோரே வெற்றி பெற்றனர். எனவே தருமம் என்றும் வெற்றியைத்தான் கொடுக்குமென்று, கதைகளும், காவியங்களும் புராணங்களும் கூறுகின்றன. இதை நாம் நன்கு சிந்திக்க வேண்டும்.

---

மயிலிட்டி

## மீன்பிடித்துறைமுகவேலை மீண்டும் தொடங்கும்

மாவிட்டபுரம், சனி

சில வருடங்களாக நிறுத்தப்பட்டிருந்த மயிலிட்டி மீன்பிடித் துறைமுக வேலைகள் மிக விரைவில் ஆரம்பிக்கப்படவிருப்பதாக மீன்பிடி அமைச்சர் தெரிவித்துள்ளார் என்று காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகம் கூறினர்

இப்பகுதி மீனவர்களின் தொழில் விருத்தியை முன்னிட்டு மயிலிட்டி மீன்பிடித் துறைமுகம் அமைக்கும் வேலைகள் சென்ற சில வருடமாக நிறுத்தப்பட்டிருந்ததையடுத்து மீண்டும் வேலையை விரைவில் ஆரம்பித்துத் தொழிலை விருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கும்படி மீன்பிடிச் சங்கங்களும்மீனவர்களும்காங்கேசன் துறை எம். பி திரு. எஸ் ஜே. வி செல்வநாயகத்திடம் கோரியிருந்தனர்

இதையடுத்து அமைச்சர்களுடன் எம் பி திரு. செல்வநாயகம் பேச்சுவார்த்தை நடத்தியபின் திரு. தே. யோசேப்பு தலைமையில் நேற்று நடந்த ஊறணி புனித அந்தோனியார் கிராம முன்னேற்ற சனசமூக நிலைய விசேஷ கூட்டத்தில் இத்தகவலை அவர் வெளியிட்டார்.

இத்துறைமுகம் மீனவர்களுக்குப் பெரிதும் உதவக்கூடியதாகவும் பெரும் வருமானத்தைத் தரக்கூடியதாகவும் அமைந்துள்ளது. ஆகலால் இத்துறைமுக வேலைகள் நிறுத்தப்பட்டுள்ளது பற்றி மீன்பிடி அமைச்சர் திரு ஜோர்ஜ் ராஜபக்ஷவுடனும் வீடமைப்பு அமைச்சர் திரு. பீட்டர் கெனமனுடனும் பேச்சுவார்த்தை நடாத்தினேன். அவர்கள் மிக விரைவில் வேலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை எடுப்பதாகக் கூறியுள்ளனர்' என திரு. செல்வநாயகம் எம். பி. தெரிவித்தார்

---

### யாருடையது?

பஸார் லேனிலுள்ள வி. ரி. திருநாவுக்கரசு என்பவரால் வன்றிக்கோட்டுப்பிள்ளையார் கோவிலடியில் ஒரு திறப்புக் கோர்வை கண்டெடுக்கப்பட்டு 'ஈழநாடு' காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரியவர் 'ஈழநாடு' காரியாலய நேரத்தில் வந்து பெற்றுக் கொள்ளலாம்.

---

### அபிவிருத்திச் சபைக் கூட்டம்

குருநகர், சனி

நல்லூர் அபிவிருத்திச் சபையின் மாதாந்தக் கூட்டம் இம்மாதம் 29ந் திகதி நல்லூர் கிராமசபை மண்டபத்தில் நடைபெறவிருக்கிறது. இக்கூட்டம் யாழ்ப்பாணக் காரியாதிகாரி திரு. புள்ளைநாயகம் தலைமையில் நடைபெறும்.

---

## "பெண்ணே நீ பெரியவள் தான்"

யாழ்ப்பாணம், ஞாயிறு

திரு. பொ. சண்முகநாதன் எழுதிய 'பெண்ணே நீ பெரியவள்தான்' என்ற நகைச்சுவைக் கட்டுரைகளைக் கொண்ட நூல் இம்மாதம் 30 ந் திகதி புதன் கிழமை மாலை யாழ்ப்பாணம் மாநகரசபை மண்டபத்தில் வெளியிடப்பட விருக்கிறது. இரசிகமணி கனக. செந்திநாதன் தலைமையில் நிகழும் இவ்விழாவில் உடுவில் தொகுதி எம். பி. திரு வி தர்மலிங்கம் கலந்து கொண்டு தொடக்கவுரையை நிகழ்த்துவார். 'புத்தொளி' வரவேற்புரையும், 'செங்கை ஆழியான்' வெளியீட்டுரையும் நிகழ்த்துவர், திரு. வே. சு. இராசலிங்கம் முதற்பிரதியை வாங்குவார். கவிஞர் வி. கந்தவனம், கலைஅரசு க. சொக்கலிங்கம், தேவன்- யாழ்ப்பாணம், 'சிற்பி' ஆகியோரும் ஆய்வுரை நிகழ்த்துவர்.

---

### நியமனம்

பருத்தித்துறை. சனி

கட்டைவேலிக் கூட்டுறவுச்சங்கங்களின் உத்தியோகப்பற்றற்ற மேற்பார்வையாளராக அன்னலையைச் சேர்ந்த திரு. எஸ். இரத்தினசிங்கம் வெளிநாட்டு உள்நாட்டு வர்த்தக அமைச்சினல் நியமிக்கப்பட்டுள்ளார். இளைப்பாறிய ஓவ[illegible] இவர் [illegible] தொண்டைமானார்.

---

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

### ஞாயிறு 27—6—71

(செய்திகள்: காலை 6-30, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9 00)

**344 மீ. அல்ல 61 மீ.**

காலை 6-00 நாதாஞ்சலி, 6-10 சைவநற்சிந்தனை, 6-15 கதோலிக்கநற்சிந்தனை 6-20 துதிப்பாடல்கள், 7-00 மெல்லிசை, 7-30 திரைகானம், 7-45 இசைவேளை, 8-00இஸ்லாமியகீதங்கள்.

**344 மீ. அல்ல 49 மீ.**

பகல் 12-00 தொழிலாளர்கேட்டவை, 1-00கதம்ப இசை.

**344 மீ. அல்ல 61 மீ.**

மாலை 4-30 கல்வி ஒலிபரப்பு. 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நாளையசந்ததி 5-45 கல்விச் சேவை

இரவு 6-10 இடைவேளை இசை, 6-15 கிளாரினெட், 6-30 கதைப்பாட்டு, 7 00நாங்களும் பொலிசும், 7-15 நாளவாத்தியக்கச்சேரி, 7-45 நேயர்விருப்பங்கள், 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-30 உரை, 9-40பாட்டு, 10-30செய்தித் தொகுப்பு.

---

### திருட்டுச் சைக்கிள்கள் அகப்பட்டன

பருத்தித்துறை, சனி

நெல்லியடிச்சந்தியில் பூட்டப்படாது வைக்கப்பட்ட சைக்கிள் ஒன்று திருடப்பட்டதைத் தொடர்ந்து நெல்லியடிப் பொலிசார் மேற்கொண்ட நடவடிக்கைகளின் மீது அச்சைக்கிள் மட்டுமன்றி சில மாதங்களுக்குமுன் திருடப்பட்ட வேறுசில சைக்கிள்களும் கரவெட்டியிலுள்ள குளமொன்றில் கண்டெடுக்கப்பட்டன. சந்தேக நபர்களைக் கைது செய்த நெல்லியடிப் பொலிசார் பருத்தித்துறைப் பொலிசாரிடம் அவர்களை ஒப்படைத்தனர். மேலும், சில சந்தேகநபர்களைப் பருத்தித்துறைப் பொலிசார் தேடிவருவதாகத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

மணலை எடுத்து எந்தப்பாடாவது பட்டுப்பிழிந்து எண்ணெய் எடுத்தாலும் எடுக்கலாம். அப்படியே தாக முள்ளவனும் கானல் நீரில் தண்ணீர் எடுத்துக்குடிக்கலாம். காட்டில் திரிந்து கொண்டேயிருந்தால் ஒருக்கால் முயல் சம்பாதித்தாலும் சம்பாதிக்கலாம். மூர்க்களுடைய மனதுக்கு மாத்திரம் சோணுமல் நடக்க சாத்தியப்படாது. — நீதிசாஸ்திரம்


# ஈழநாடு

Eelan du National Tamil Daily
Telegrams: "EELANADU" Jaffna
Post Box: 49 Jaffna Telephone: 389

சாதாரண விரோதிகிருது வருஷம் ஆனிமாதம் 13 - திகதி (27 - 6 - 71)


## வரவேற்கத்தக்க உத்தரவு

அரசாங்கத்தில் வேலை பார்க்கும் பெரிய அதிகாரிகளும் இனிக் காரியாலயத்துக்கு வரும்போதும் வேலை முடிந்து வெளியே செல்லும்போதும் கையெழுத்திட்டு நேரத்தையும் குறிப்பிடவேண்டும் என்று பிறப்பிக்கப்பட்ட புதிய உத்தரவு பலவிதங்களிலும் வரவேற்கத்தக்கதாகும். இந்த உத்தரவைச் சிறப்பாக மற்றச் சிப்பந்திகள் எல்லாரும் மகிழ்ச்சியுடன் வரவேற்பதுடன் காரியாலய வேலையும் அதிக ஒழுங்காக நடைபெற்றுப் பொதுமக்களுக்கும் நன்மை பயக்கும் என்பதில் ஐயமில்லை.

பிரிட்டிஷ் ஆட்சிக்காலத்தில் செய்யப்பட்ட நிர்வாக ஒழுங்கின்படி மேல் அதிகாரிகள் வரும்போது கையெழுத்திட வேண்டியதில்லை. மற்றச் சிப்பந்திகள் மட்டுமே வரும் நேரத்தைக் குறிப்பிட்டுக் கையெழுத்திட வேண்டியிருந்தது. வெள்ளைக்கார அதிகாரிகள் தமது 'மதிப்பை உயர்த்திக்கொள்வதற்காக'' இவ்விதம் செய்தனரோ தெரியவில்லை. காரணம் எதுவாயினும் தலைமை அதிகாரிகளும் கையெழுத்திடவேண்டுமென்ற ஒழுங்கின் மூலம், காரியாலயத்தில் சிப்பந்திகள் குறித்த காலத்தில் வருவதுடன். உயர்வு தாழ்வு மனப்பிராந்திகளும் குறைந்து வேலையும் அதிக சுமுகமாக நடைபெறமுடியும். மேலதிகாரியும் காலையிலேயே குறித்த நேரத்தில் வந்துவிடுவாரென்று தெரிந்தால் சிப்பந்திகளும் தாமதிக்காமல் வந்துவிட முயல்வார்கள்.

பல காரியாலயங்களில் மேலதிகாரிகளில் சிலர் குறித்த காலத்துக்கு முன்பும் வருவதுண்டு. ஆனால் பெரும்பாலானவர்கள் துரதிருஷ்டவசமாக இஷ்டமான நேரத்துக்கு வருவார்கள். சில நாட்களில் அவர்கள் வருவார்களா, வரமாட்டார்களா என்பதும் யாருக்கும் தெரியாது. இதனால் காரியாலய வேலைகள் எவ்வளவுதூரம் பாதிக்கப்படும் என்பதையும் பொதுமக்கள் எவ்வளவு சங்கடப்படுவார்கள் என்பதையும் விளக்கத் தேவையில்லை. பெரிய அதிகாரிகள் ஒழுங்காக இருந்து வழிகாட்டினால்தான் மற்றவர்களும் சரியாக வேலை செய்ய முற்படுவர்.

அதிக சம்பளம் வாங்கும் பெரிய அதிகாரிகளில் சிலர் கட்டாயம் கையெழுத்திடவேண்டுமென்ற புதிய உத்தரவை கண்டு, தங்களுக்கு இது ஓர் அவமதிப்பு என்று கருதக்கூடும். அப்படி நினைப்பின் அது தவறு. கட்டாயம் இருந்தால்தான் ஒழுங்குமுறை காக்கப்பட முடியும். அப்போதுதான் மேல் அதிகாரிகளும் குறித்த நேரத்தில் வந்து தங்கள் கடமைகளைப் பார்ப்பர். சில அதிகாரிகள் காரியாலய 'பைல்களை' தங்கள் வீடுகளுக்கும் எடுத்துச் சென்று கடமை பார்க்க வேண்டியிருக்கிறதென்றும் 24 மணி நேரமும் தங்களுக்குப் பொறுப்புள்ளதென்றும் ஆகவே காரியாலயத்துக்கு வந்து குறித்த நேரத்தில் மற்றவர்களைப் போல் கையொப்பமிட வேண்டுமென்பது சரியாகாதென்றும் வாதிக்கலாம். ஆனாலும் காரியாலய வேலைகள் ஒழுங்காக நடைபெறவேண்டுமாயின், முதலில் மேல் அதிகாரிகள் மற்றவர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருக்க வேண்டும். இதுவரை இல்லாமல் புதிதாகக் கையெழுத்திடுவது தங்களுக்கு மதிப்புக் குறைவு என்று அவர்கள் கருதத் தேவையில்லை. இப்புதிய நியதிக்கு அவர்கள் கட்டுப்படுவதன் மூலம் காரியாலய அலுவல்கள் இனி அதிக சுறுசுறுப்பாக நடக்கவும் பொதுமக்களுக்கு வீண் தவக்கமின்றி காரியங்கள் நிறைவேறவும் உதவியவர்களாக இருப்பர்.

மேல் அதிகாரிகள் காரியாலயத்துக்கு உரிய காலத்தில் வருவதுடன் அவ்வப்போது மற்றச் சிப்பந்திகள் வேலை செய்யுமிடத்துக்கும் சென்று பார்வையிடவும் வேண்டும். தமது அறைக்குள் நாற்காலியில் இருந்து தூங்குவார்களாயின் அவர்கள் வந்தும் என்ன பயன்? பொதுமக்களின் ஊழியர்களே தாங்கள் என்பதையும் பொதுமக்கள் செலுத்தும் வரிப் பணத்தில் இருந்துதான் தங்களுக்குச் சம்பளம் கிடைக்கிறதென்பதையும் மேல் அதிகாரிகள் உள்ளிட்டு எல்லா அரசாங்க ஊழியர்களும் உணர்ந்தால் குறித்த நேரத்தில் காரியாலயத்துக்கு வந்து தங்கள் கடமைகளையும் சரிவரச்செய்வர். அரசாங்க காரியாலயங்களில் வேலைகள் இனி சுணங்காமல் நடக்க புதிய உத்தரவு உதவுமென்று நம்புவதுடன், இவ்வுத்தரவு பிறப்பிக்கக் காரணமானவர்களைப் பாராட்டுகிறோம்.

## ஜூலை முதல் ஐந்தரை..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாடசாலைகள் அன்றைய தினம் மாலை 12-30 மணிக்கு மூடப்படும்.

பொதுமக்களின் கண்டனங்களைப் பொருட்படுத்தாமல் இருக்கப் போவதில்லை. ஆனால் கல்வித் தரத்தை உயர்த்தும் நோக்குடனேயே 6 நாட் திட்டத்தைக் கொண்டுவந்தேன். இப்போது பொதுஜனங்களின் அபிப்பிராயத்துக்கு மதிப்புக்கொடுத்து இவ்வித மாறுதல்கள் செய்யப்பட்டுள்ளது.

# முல்லைத்தீவு பஸ்கண்டக்டர் கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

முல்லைத்தீவு, சனி

முல்லைத்தீவுப் பகுதியில் பரபரப்பை ஏற்படுத்திய பஸ் கொண்டக்டர் கொலை வழக்கில் எதிரிகள் இருவரும் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

இக் கொலைவழக்கு மீண்டும் நேற்று முல்லைத்தீவு நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா முன்னிலையில் விசாரணைக்கு எடுக்கப்பட்டது. நீதிமன்றத்தின் உள்ளேயும் வெளியேயும் பெருந் திரளாக மக்கள் கூடியிருந்தனர்.

இவ் வழக்கில் முல்லைத்தீவு இபோசவில் கொண்டக்டராகக் கடமைசெய்த துரைராசாவை குழுவை முனையில் வைத்து 1970-ம் ஆண்டு ஆனி மாதம் எட்டாந் திகதி இரவு கொலை செய்ததாக குமுழமுனை வாசிகளான மயில்வாகனம், தியாகராசா, வேலுப்பிள்ளை, இரத்தினசிங்கம் ஆகியோர் மீது முல்லைத்தீவுப் பொலிசாரால் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

எதிரிகளுக்காக சிரேஷ்ட வழக்கறிஞராக திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் கியூ. சி. அட்வகேட் அரசுவாலின் உதவியுடனும் புரக்டர் சிவ, சிறீதரனின் அனுசரணையுடனும் இவ்வழக்கு ஆரம்பகாலத்தில் ஆஜராகி வாதாடினர்.

''சாட்சியங்கள் எதிரிகள் மீது சுமத்தப்பட்ட குற்றங்களை நிரூபிக்காததினால் எதிரிகளை விடுதலை செய்வதாகக் கூறி நீதிபதி எதிரிகளை விடுதலைசெய்தார்.

வவுனியா பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. டயஸ் வழக்கை நடத்தினர்.

## 15 வருடமாக கோரியும் மின்சாரம் கிடைக்கவில்லையாம்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கச்சாய் கிராமசபைப் பகுதிக்கு மின்சாரம் வழங்கும்படி கோரும் மகஜரொன்றை அப்பகுதி மக்கள் கிராமசபைமூலம் மின்சார சபைக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

1955ம் ஆண்டுமுதல் இப்பகுதிக்கு மின்சாரம்பெறுவதற்கு பலதடவை முயற்சி எடுத்தும் இதுவரை பலனளிக்கவில்லை.

தேசிய அரசாங்க காலத்தில் இவ்விஷயமாக ஒரு மாநாடு கூட்டப்பட்டதென்றும், அம்மாநாட்டில் மின்சாரத்துக்கு கடன்பெற வேண்டுமானால் இருவருடம் சேவைவரி அறவிட வேண்டுமெனத் தெரிவிக்கப்பட்டதாகவும் இதற்கு கிராமமக்களிடையே பலத்த எதிர்ப்பு இருந்ததாகவும், கச்சாய் கிராமசபைத் தலைவர் திரு ஏ.கி. சிதம்பரப்பிள்ளை தெரிவித்தார்.

அண்மையில் உருவாக்கப்பட்ட சில கிராமசபைகளுக்கு மின்சாரம் வழங்கப்பட்டிருப்பதாகவும், சுமார் 15 வருடகாலமாக இக் கிராமசபையின் கோரிக்கைபுறக்கணிக்கப்பட்டு வந்துள்ளதாகவும் அவர் கூறினர்.

......

## ரயிலில் மோதியவர் உயிர் தப்பினர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பிலிருந்து வந்த யாழ் எக்ஸ்பிரஸ் ரயிலில் மோதுண்ட கொடிகாமத்தைச் சேர்ந்த ஆறுமுகம் என்பவர் தலையிலும் காலிலும் காயங்களுடன் யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். காயமடைந்தவரை அதே எக்ஸ்பிரஸ் வண்டி சாரதி சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதித்தார். அங்கிருந்து இவர் உடனடியாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

......

## வீடுசேருமுன் மரணமானர்

யாழ்ப்பாணம், ஞாயிறு

வரணி சுட்டிபுரம் அம்மன் கோவிலுக்குச் சென்றுவிட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த மீசாலை வடக்கைச் சேர்ந்த சரவணமுத்து தாமோதரம் பிள்ளை அல்லது சேனதி என்பவர் கொடிகாமம் சந்தையில் திடீரென மரணமானர்.

மரணவிசாரணை அதிகாரி திரு. கே. ஞானச்சந்திரன் விசாரணையின் பின் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளித்தார்.

......

## இன்று

யாழ்ப்பாணம், ஞாயிறு

இன்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்ப்பாணம் கலைப் புலவர் வீதியில் திருவாசகர் மன்றம் திறந்துவைக்கப்படவிருக்கிறது. முதலியார் செ. சின்னத்தம்பி மன்றத்தைத் திறந்துவைப்பார். யாழ். நகர முதல்வர் திரு. ஏ. ரி. துரையப்பா, வடமராணச்சங்க அதிகாரி திரு. எஸ். எம் ஜே. சேனரத்ன உட்பட பல பிரமுகர்கள் விழாவில் கலந்துகொண்டு உரையாற்றுவர். நண்பகல்மகேஸ்வர பூசை இடம்பெறும்.

### நீர்வேலியில் விழா

நீர்வேலி கந்தசுவாமி தேவஸ்தானத்தில் இன்று மாலை 6 மணிக்கு மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை நடைபெறவிருக்கிறது. பண்டிதை செஞ்சொற்செம்மணி செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி 'வாதவூர் நல்லிசைப் புலவர்' என்னும் பொருள் பற்றி உரையாற்றுவார்.

## தமிழரசுக்கட்சி ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

விருந்தது இப்படியாக இவர்கள் எதையும் யோசனை செய்யாமல், பிழையாகவே நடந்துவருகின்றனர்.

மொழிப் பிரச்னையைத் தீர்ப்பதற்கு வட்டமேசை மாநாடு ஒன்றைக் கூட்டுவோம் என்று எமது தலைவர் திரு ஜீ ஜீ கேட்டபோது, ஏளனம் செய்தவர்கள், இப்போது சர்வகட்சி மாநாடு நடத்துங்கள் என்கிறார்கள் இதுதான் தமிழரசு வரலாறு.

### சோஸலிசப்பாதை வெற்றிதரும்

சோஸலிசப்பாதையில் முன்னேறி சிறுபான்மையோர் பிரச்னை தீர்ந்துவிடும் என்பது ''நமது அசைக்கமுடியாத நம்பிக்கை' என்கிறார் திரு ஆனந்தசங்கரி

ஒரு சந்தர்ப்பத்தில் உடுப்பிட்டி எம்.பி. திரு. ஜெயக்கொடி பேசுகையில், இலங்கையில் ஒரு வங்காள தேசத்தை உருவாக்கும் நிலை ஏற்படக்கூடாது என்றார். இதைச்சுட்டிக்காட்டி திரு. ஆனந்தசங்கரி பேசுகையில், ''வடக்கு கிழக்கு பகுதிகளில் வசிக்கும் தமிழ் மக்களை விட எண்ணிக்கையில் அதிகமான தமிழர் ஏனைய மாவட்டங்களில் வசிக்கிறார்கள் இவர்களைக் காப்பாற்றுவதற்கு எந்த யாக்யாஹான் முன் வருவார்! இவர்களைக் காப்பாற்றுவார் வருவது'' என்றார்

பருத்தித்துறை எம் பி திரு துரைரத்தினம் பேசுகையில் பிரிவுநிலை அரசியலுக்கு வெளியே இருந்து தீர்க்கப்பட வேண்டும் என்றார்- வேறுபலரும் பேசினர்.

அரசியல் நிர்ணய சபை மீண்டும் நாளை மாலை 2 மணிக்குக் கூடும்.

## அரசியல் நிர்ணய சபை

கொழும்பு, சனி

அரசியல் நிர்ணயசபை ஜூலை மாதத்தில் 13 நாட்களுக்குத் தொடர்ந்து கூட்டம் நடத்தலாமென அரசாங்கம் எதிர்பார்ப்பதாக அரசியல் விவகார அமைச்சர் கலாநிதி கொல்வின் ஆர் டி. சில்வா அரசியல் நிர்ணயசபையில் அண்மையில் தெரிவித்தார்.

மந்திரிசபை தனது வாராந்தக் கூட்டத்தை நடத்தும்:

வெள்ளியாவுக்கு அடுத்த மூன்றும் நாளைத்தவிர்ந்த ஏனைய நாட்களில் அரசியல் நிர்ணய சபை காலை 10 மணிக்கு ஆரம்பித்து 5 அல்லது 6 மணிவரை நடைபெறுமென்றும் ஆட்சிமன்றம் கூடும் நாளில் அரசியல் நிர்ணய சபை பிற்பகல் 2 மணியிலிருந்து 7மணி வரையும் நடைபெறுமென்றும் அரசியல் நிர்ணயசபைக் கூட்டத்தில் கலந்துகொள்ளும் அங்கத்தவருக்கு நாளொன்றுக்கு ரூபா 50 அலவன்சாகக் கொடுக்கப்படுமென்றும் அமைச்சர் தெரிவித்தார்.

ஆட்சிமன்றப் பிரதிநிதிகளுக்கு அளிக்கப்படும் அலவன்சைவிட இப்பணம் மேலதிகமாக அளிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் ஒவ்வொரு அங்கத்தவரும் ஜூனில் ரூபா 550ம் ஜூலை மாதத்தில் ரூபா 650ம் பெறுவார்கள். (சி பி ஏ)

## ரூ. 75 அபராதம்

முல்லைத்தீவு, சனி

"பஸ்ஸில் நீர் மட்டும் பிரயாணம் செய்வதில்லை. எத்தனையோ பிரயாணிகளும் பிரயாணம் செய்கின்றனர் இ. போ. ச. பஸ் உனது சொத்தல்ல நீ குடிவெறியில் பஸ்ஸில் ஏறி குளப்படி செய்தது மன்னிக்கமுடியாத குற்றம்" என முல்லைத்தீவு நீதிபதி திரு. விமல் விக்கிரமசூரியா வற்றாப்பளை வாசியான என். மரியாம்பிள்ளை என்பவருக்கு கூறினார்.

எதிரி இ போ ச பஸ்ஸில் குடிவெறியில் ஏறிக்குழப்பம் விளைவித்ததாக முல்லைத்தீவுப் பொலிசாரால் தொடரப்பட்ட வழக்கில் நீதிபதி மேற்கண்டவாறு கூறினர்.

எதிரி தனது குற்றத்தை ஒப்புக்கொண்டார் நீதிபதி எதிரிக்கு 75 ரூபா அபராதம் விதித்ததுடன் அபராதம் கட்டத்தவறினால் 6 வார சிறைத்தண்டனை அனுபவிக்கும்படி கூறித் தீர்ப்பளித்தார்.

## தேவை

வீட்டு உதவிக்கு 40 வயதுக்கு மேற்பட்ட ஒரு பெண் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். ... ... யாழ்ப்பாணம். 8801

இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இலங்கோயில் மேற்கு வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1971ம் ஆண்டு ஜூன் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org